[2011 ஆகஸ்ட் 30

பிற்பகல் 6–20

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 30—8—2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2011 ஆகஸ்ட் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் குதிரை பேரம், கழுதை பேரம் என்பதையெல்லாம் தடுக்கக்கூடிய ஒன்றாக இருப்பது என்பது வரவேற்கத்தக்கது. நீங்கள் மாவட்ட பஞ்சாயத்துக்கும், ஒன்றியத்திற்கும் இப்போது செய்ய முடியாது என்று சொல்வது சரி. ஆனால், நாம் அதிலும் மத்திய அரசாங்கத்தை அணுகி இதே முடிவை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உள்ளாட்சியில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு என்பது மத்தியச் சட்டத்தில் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு விட்டது. கேரள சட்டமன்றத்திலும் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதையும் நாம் உடனே அமல்படுத்த முடிந்தால் நன்றாக இருக்கும். நம்முடைய சட்டத் திருத்தத்திலே 6 வது பக்கத்தில் “5–ல் 4 என்ற எண்ணிக்கையிலான மன்ற உறுப்பினர்கள் வந்திருந்து–மேயர் பதவி நீக்கத்திற்கு–5–ல் 4 உறுப்பினர்கள் வந்திருந்து, தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பார்களானால் அத்தீர்மானமானது மன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும். மன்றத்தின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையில் 5–ல் 4 என்ற எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வந்திருந்து மற்றும் வாக்களித்து அதனை நிறைவேற்றவில்லையானால்” என்று இருக்கிறது. 5–ல் 4 பங்கு வந்திருக்க வேண்டும் என்பது சரி. சட்டம் நிறைவேற வேண்டுமென்றால், வந்திருந்த அந்த உறுப்பினர்களில் பெரும்பான்மை இருந்தால் போதுமா அல்லது அந்த 5–ல் 4 எண்ணிக்கை அளவிற்கே உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டுமா என்ற குழப்பம் அதிலே இருக்கிறது. ஆகவே அது குறித்து தெளிவான விளக்கம் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன கருத்திற்கு, அதற்கு உறுதுணையாக 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த Communal rotation நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அடுத்த முறை தேர்தல் வருகின்ற நேரத்தில் இதுபோன்ற சிறு சிறு

குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவருக்குக் கூறிக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 5–ல் 4 பங்கு என்று. 5–ல் 4 பங்கு என்பது அன்று அவையில் உட்காருகின்ற, எத்தனை பேர் இருக்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2011), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.